1995 மார்ச் 29]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 144, திருமதி என். கனகவல்லி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

144—

ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாக்குதல்

***37908—திருமதி என். கனகவல்லி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) விளாத்திகுளம் தொகுதி, பேரிலோவன்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திருமதி என். கனகவல்லி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை என்ற பதிலைத்தான் நான் எதிர்பார்த்தேன். பேரிலோவன்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்தில் புறநோயாளிகள் மட்டும்தான் பயன்பெறுகிறார்கள். அந்த கிராமம் மெயின் சாலையிலிருந்து 8 கிலோமீட்டர் தூரத்தில் அமைந்திருப்பதாலும், முன்புபோல் பெண்களுக்கு கிராமங்களில் பிரசவம் பார்ப்பதற்கு என்று ஆயாக்கள் தனியாக இல்லாத காரணத்தாலும், அதேநேரத்தில் ஆரோக்கியம் இல்லாத சூழ்நிலையில் கர்ப்பிணிப் பெண்கள் இருக்கிற சூழ்நிலை இருப்பதாலும் அவர்கள் மருத்துவமனைகளை நாட வேண்டிய சூழ்நிலை உள்ளது. அவ்வாறு மருத்துவமனைக்கு செல்ல வேண்டுமென்றால் புதூர் அல்லது அருப்புக்கோட்டை அல்லது சாத்தூர் போன்ற நகரங்களுக்குத் தான் செல்ல வேண்டியிருக்கிறது. அப்படிச் செல்ல வேண்டுமென்றால் அங்கு போக்குவரத்து வசதி கிடையாது. எனவே, அன்டைம்-ல் இந்தமாதிரி பிரச்சினை ஏற்படும்பொழுது அவர்கள் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாவதால் மீண்டும் ஒரு தடவை அதைப் பரிசீலனை செய்து அங்கு அரசு மருத்துமனையாக அதை உருவாக்கித் தருவார்களா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-15

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளாத்திகுளத்திலே ஏற்கெனவே ஒரு அரசு மருத்துவமனை இயங்கி வருகிறது. அரசினுடைய கொள்கைப்படி ஒரு தாலுக்காவுக்கு ஒரு தலைமை மருத்துவமனை. எனவே, அந்த அடிப்படையிலே பார்க்கிற பொழுது, இந்த தாலுக்காவிற்கு ஒரு மருத்துவமனை ஏற்கனவே இயங்கிக் கொண்டிருக்கிறது. அங்கே மக்கள் தொகை 88 ஆயிரம் பேர் அந்த ஒன்றியத்திலே இருக்கிறார்கள். அதற்காக ஆரம்ப சுகாதார நிலையமும் இயங்கி கொண்டிருக்கிறது. எனவேதான், நான் மருத்துவ மனையாக அதை உயர்த்த முடியாது என்று தெரிவித்தேன். அரசினுடைய கொள்கைப்படி, திட்டப்படி ஒரு தாலுக்காவுக்கு ஒரு மருத்துவ மனை என்பதை மட்டும் இப்போது நாம் நடைமுறைப்படுத்தி வருகிறோம். எனவே இதைச் செய்வதற்கு வாய்ப்பு இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா என் 145, திருமதி பி. நிர்மலா, மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்.

145—

கிராமங்களுக்குச் சிறிய பேருந்துகள் இயக்குதல்

*35616—**திருமதி பி. நிர்மலா:**

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஒவ்வொரு மாவட்ட தலைநகரத்திலிருந்தும் அதனைச் சுற்றியுள்ள சிறு சிறு கிராமங்களுக்கு சிறிய பேருந்துகள் (Mini Buses) இயக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஒவ்வொரு மாவட்டத் தலைநகரத்திலிருந்தும், அதனைச் சுற்றியுள்ள கிராமங்களுக்கு தேவைக்கேற்ப பேருந்துகள் இயங்கி வருவதால் சிறிய பேருந்துகள் (Mini Buses) இயக்கும் திட்டம் ஏதுமில்லை.

திருமதி பி. நிர்மலா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இல்லை என்று கூறிவிட்டார்கள். ஒவ்வொரு ஏழைக் குடிமகனும் பயன் பெற வேண்டுமென்ற முறையிலே,